பாராளுமன்றத்தில் அரசாங்கக் கணக்குகள் தொடர்பான குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக நிலையியற் கட்டளை இல. 119 (4) இன் கீழ் கௌரவ அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் மற்றும் நடவடிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

பாராளுமன்ற வெளியீட்டு தொடர் இல. 290
நிறுவனத்தின் பெயர் :- விமான சேவைகள், ஏற்றுமதி வலய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

	குழுவினால் அடையாளம்காணப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை நிவர்த்திப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை
01	வருடாந்த செயற்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த அமைச்சு 2020.08.09 ஆந் திகதி நிறுவப்பட்ட புதிய இராஜாங்க அமைச்சாகும். 2020 இறுதி வரை நாட்டில் ஏற்பட்ட கோவிட் தொற்றுநோய் காரணமாக நாடு முடக்கப்பட்டிருந்ததாலும், இயல்பான கடமைகள் மேற்கொள்ளப்படாததாலும், அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததாலும் 2020 ஆம் ஆண்டின் 4 மாதங்களுக்கான செயற்திட்டத்தை தயாரிக்க முடியவில்லை. 2021 ஆம் ஆண்டுக்காக முதலீட்டு ஊக்குவிப்பு சபைக்கு ஒதுக்கப்பட்ட ரூ. 1900 மில்லியனுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் முதலீட்டு ஊக்குவிப்பு சபையுடன் கலந்துரையாடிய பின்னர், வருடாந்த செயற்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.
02	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	மேலே உள்ள பந்தி 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில், 2020 ஆம் ஆண்டின் 04 மாத காலத்திற்கு ஒரு கொள்முதல் திட்டத்தை தயாரிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. 2021ஆம் ஆண்டில் அமைச்சை இந்த இடத்தில் நடத்திச்செல்வது தொடர்பில் உறுதியானதொரு தீர்மானத்திற்கு வரமுடியாதிருந்தமையால் 2021ஆம் ஆண்டுக்கான கொள்முதல் திட்டத்தை தயாரித்து கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் சிக்கல் ஏற்பட்டது.
03	நிதி ஒழுங்குவிதிகள் 134 (2) இன் படி உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2020.08.09 ஆந் திகதி அமைச்சு தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து வெற்றிடமாகவுள்ள உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடத்தை நிரப்பக் கோரி ஆந் திகதிகளில் 2020.09.25, 2021.02.18 கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக தனிப்பட்ட மட்டத்தில் கலந்துரையாடி உத்தியோத்தர் ஒருவரைப் பெற்றுக்கொள்ள முயற்சித்த போதும் அது பயனளிக்க வில்லை.
04	2017.06.26 ஆந் திகதிய 1/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ	2020.08.09 ஆந் திகதி இந்த அமைச்சு தாபிக்கப்பட்டுள்ளது.

	சுற்றறிக்கையின் பந்தி 7இன் படி, 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் பயன்படுத்தப்படாதவை பற்றிய தகவல்கள் கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	
05	அனைத்து வாகனங்களினதும் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கைவசம் இல்லாமை.	அமைச்சுக்கு சொந்தமான அனைத்து வாகனங்களும் (10 வாகனங்கள்) சுற்றுலா அமைச்சிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டவை என்பதுடன், அவற்றில் 8 வாகனங்கள் இந்த அமைச்சினால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. P H – 0669 வாகனத்தின் மூல பதிவுச் சான்றிதழ் (தவணை குத்தகை முறையனை கீழ் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதால்) சம்பந்தப்பட்ட வங்கியிடம் வினவப்பட்டுள்ள போதும், இதுவரை அனுப்பப்படவில்லை. வாகனத்தை கைப்பற்றுவதற்காக P H -1207 வாகனத்தை கையகப்படுத்த மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
06	அரசாங்க வாகன விபத்துகள் குறித்து நிதி ஒழுங்குவிதிகள்103, 104, 109 மற்றும் 110ன் படி முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	வாகன விபத்துக்கள் தொடர்பில், நிதி ஒழுங்குவிதிகள் 103 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
07	அனுமதிக்கப்பட்ட வரம்பை மீறி ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர்.	2021 டிசம்பர் 31 அன்று அமைச்சின் ஊழியர்களின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

சேவை வகை	அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை	நிரந்தர ஊழியர் எண்ணிக்கை	வெற்றிடங்களின் எண்ணிக்கை
சிரேஷ்ட நிலை	13	6	7
மூன்றாம் நிலை	1	-	1
இரண்டாம் நிலை	30	20	10
ஆரம்ப நிலை	13	5	8
தற்காலிக	4	2	2
ஒப்பந்த	-	2	(2)
மொத்தம்	61	35	26

08	பிரஜைகள்/ வாடிக்கையாளர் சாசனம் உரிய முறையில் தயாரிக்கப்பட்டிருக்காமை. பிரஜைகள்/ வாடிக்கையாளர் சாசனம்	2020.08.09 ஆந் திகதி இந்த அமைச்சு தாபிக்கப்பட்டதனால், இந்த விடயத்தைக் கையாள போதுமான காலம் இருக்கவில்லை.

	நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணித்து மதிப்பிடுவதற்கான முறைமையொன்று நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டிருக்காமை.	
09	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50% க்கும் குறைவாக இருந்தமை	மனித வள பற்றாக்குறையினால், கொரோனா தொற்றுநோய் காரணமாக பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக வழங்கப்படும் பயிற்சி வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டன.
10	அதிகபட்ச சேவைக் காலத்தை நிறைவு செய்த உத்தியோகத்தர்களை முறையாக இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	2020.08.09 ஆந் திகதி இந்த அமைச்சு தாபிக்கப்பட்டுள்ளது.

K.D.S. Ruwanchandra
Secretary
Ministry of Ports, Shipping & Aviation
No. 19, Chaithya Road, Colombo 01, Sri Lanka.